**10.3 பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் பொறியாளர் பணியமைப்பு– பொறியியல் பணியிடங்களுக்கான நபர்களை மாற்றுப்பணி/கடன் அடிப்படையயில் அரசுத்துறைகள், வாரியங்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்தும் பெற்று பணியமர்த்தல் – அரசாணைக்கு திருத்தம் வெளியிடப்படுகிறது.**

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை

அரசாணை (நிலை) எண். 24 நாள் : 12.2.2007

படிக்கப்பட்டவை

1. அரசாணை(நிலை)எண்.93 ந.நி(ம)கு.வ துறை நாள் 28.5.1998.
2. பேரூராட்சிகளின் இயக்குநரின் கடிதம் எண். ந.க.எண் 2235/2006/அ2 நாள் 8.1.2007

**ஆணை :**

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் பேரூராட்சித் துறையில் ஏற்கனவே உள்ள பொறியியல் பணியிடங்களையும் சேர்த்து கீழ்க்ண்டவாறு பொறியாளர் பணியிடங்களை ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியது.

| வ.எண் | பணியிடத்தின் பெயர் மற்றும் ஊதிய விகிதம் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | செயற் பொறியாளர்<br>(ரூ.10000–325–15200 | 1 |
| 2 | உதவி செயற் பொறியாளர்<br>(ரூ.8000–275–13500<br>மண்டலம் – 18<br>சிறப்பு பிரிவு –15<br>––––––––<br>மொத்தம் – 21<br>(15 பணியிடங்கள் ஏற்கனவே உள்ளன) | 21 |
| 3 | உதவி பொறியாளர்/ அளவிலை பொறியாளர்<br>(ரூ.6500–200–10500<br>மண்டலம் – 90<br>சிறப்பு பிரிவு –35<br>––––––––<br>மொத்தம் – 125<br>(67 பணியிடங்கள் ஏற்கனவே உள்ளன) | 125 |
| 4 | வரைவாளர்<br>(ரூ.4500–125–7000<br>செயற் பொறியாளர் அலுவலகம் 2<br>மண்டல உதவி செயற் பொறியாளர் அலுவலகம் 16<br>சிறப்பு பிரிவு உதவி செயற் 5<br>––––<br>மொத்தம் 23<br>–––– | 21 |
| 5 | பணி ஆய்வாளர்<br>(ரூ.3050–75–3950–80–4590)<br>மண்டலம் – 180<br>சிறப்பு பிரிவு –70<br>––––––––<br>மொத்தம் – 250 | 125 |

2. அவ்வரசாணையில் பத்தி 6ல் பதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள மேற்கண்ட பொறியியல் பணியிடங்களுக்கான நபர்களை மாற்றுப்பணி அடிப்படையில் நகராட்சி பொறியாளர்கள் அலகிலிருந்து பெற்றும் பணியமர்த்தப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டது.

3. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட பேரூராட்சிகளின் இயக்குநர் கடிதத்தில் நகராட்சிகள் நிர்வாகம் உள்ளிட்ட துறைகளில் பொறியாளர்கள் பற்றாக்குறை உள்ளதாலும் மற்றும் அனைத்து பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் பணிகளின் தரம் மேலும் மேம்படுத்தும் வகையிலும் , தேவைக்கேற்ப மாற்றுப்பணி அல்லது கடன் அடிப்படையில் அனைத்து அரசு துறைகளிலிருந்தும் பெற்று பணியமர்த்தப்படலாம் என கீழ்கண்டுள்ள விவரப்படி திருத்தம் வெளியிடும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

| அரசாணை எண். 93 ந.நி.ம.கு.வ துறை நாள் 28.5.98–ல் தற்போது உள்ளது | திருத்தம் வெளியிட வேண்டியது |
|---|---|
| பக்கம் 5–ல் பத்தி 6<br>புதிதாக அனுமதிப்பட்டுள்ள மேற்கண்ட பொறியியல் பணியிடங்களுக்கான நபர்களை மாற்றுப்பணி அடிப்படையில் நகராட்சி பொறியாளர்கள் அலகிலிருந்து பெற்று பணியிமர்த்தப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது. | புதிதாக அனுமதிப்பட்டுள்ள மேற்கண்ட பொறியியல் பணியிடங்களுக்கான நபர்களை தேவைக்கேற்ப மாற்றுப்பணி அல்லது கடன் அடிப்படையில் அனைத்து அரசு துறைகளிலிருந்தும் பெற்று பணியமர்த் தப்படலாம். |

4. மேலே பத்தி 5–ல் தெரிவிக்கப்பட்டுள்ள பேரூராட்சிகளின் இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து அனைத்து அரசுத்துறைகளில் மட்டுமல்லது வாரியங்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்தும் பெறலாமென்று திருத்தம் வெளியிட முடிவு செய்துள்ளது. அதற்கிணங்க அரசாணைகள் எண். 93 நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை துறை நாள் 28.5.98–ற்கு கீழ்க்கண்ட திருத்தம் வெளியிடுகிறது–

| பக்கம் 5–ல் பத்தி 6 தற்போதுள்ளது) | வெளியிடப்படும் திருத்தம் |
|---|---|
| "புதிதாக அனுமதிப்பட்டுள்ள மேற்கண்ட பொறியியல் பணியிடங்களுக்கான நபர்களை மாற்றுப்பணி அடிப்படையில் நகராட்சி பொறியாளர்கள் அலகிலிருந்து பெற்று பணியிமர்த்தப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது." | ''புதிதாக அனுமதிப்பட்டுள்ள மேற்கண்ட பொறியியல் பணியிடங்களுக்கான நபர்களை தேவைக்கேற்ப மாற்றுப்பணி அல்லது கடன் அடிப்படையில் பிற அரசு துறைகள், வாரியங்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்தும் பெற்று பணியமர்த்தப்படலாம் என அரசு ஆணையிடுகிறது. |

(ஆளுநரின் ஆணைப்படி)

**கே.தீனபந்து**
அரசு செயலாளர்